1994 ஏப்ரல் 22]

தடுப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரங்களை எடுத்துக்கொள்கின்ற வகையிலேதான் மைய அரசு செயல்படுகின்றது. ஆகவே அந்த அடிப்படையில் மாநில அரசுக்கு மைய அரசு அந்த உரிமையைக் கொடுக்குமேயானால் அதை ஏற்று, இந்த அரசு செயல்படுவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அம்மமுத்து பிள்ளை, (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினருடைய கேள்வி. இரண்டாவது துணைக் கேள்வி உங்களுக்கு அனுமதிக்க முடியாது. ஒருவருக்குப் பதிலாகக் கேட்கிறவர்களுக்கு இரண்டாவது துணைக் கேள்வி அனுமதிப்பதில்லை. விதிப்படி அனுமதிக்க முடியாது. டாக்டர் அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையாளப் படங்களின் பெயர்களைத் தமிழில் மொழி மாற்றம் செய்யும்போது உண்மையான பெயரைச் சொல்லாமல், கவர்ச்சி ஊட்டுகின்ற பெயர்களைச் சூட்டுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் படத்தில் சம்பந்தப்படாத கவர்ச்சிக் காட்சிகளை சுவரொட்டிகளாகப் போட்டு விளம்பரப்படுத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைத் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர்களிலேயும், காட்சிகளிலேயும் மாற்றம் தருகின்ற வகையிலே பெயர்களும், காட்சிகளும் காட்டப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். எப்படிக் காட்டினாலும் சரி, எந்த வடிவத்தில் காட்டினாலும் சரி, அந்தப் படத்தில் ஆபாசம் இருந்தால் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 355, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

355—

தனியார் பள்ளிக் கட்டிடங்களுக்கு "உறுதித்தன்மை சான்றிதழ்" வழங்குதல்.

***10045**—திரு. இரா. அப்பு நடேசன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 ஏப்ரல் 22

(அ) தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற பொதுப் பணித்துறையிடம் இருந்து, கட்டிடத்தின் "உறுதித்தன்மை சான்றிதழ்" (Stability Certificate) பெறுவதில் தாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சான்றிதழ் தாமதமின்றி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது குறித்து அரசுக்குப் புகார்கள் வந்துள்ளன.

(ஆ) உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார் பள்ளிக் கட்டிடங்கள் மிகவும் உறுதியாகவும், சீராகவும் இருந்தாலகூட, அவர்கள் புதிய வகுப்புகள் தொடங்க அரசிடம் அனுமதி கேட்கின்றபோது, உறுதிச் சான்றிதழ கேட்கிறார்கள். அந்த உறுதிச் சான்றிதழ் கொடுக்க பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஒரு அலுவலகம் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 400 பள்ளிகள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் ஒரே ஒரு அலுவலர்தான் இருக்கிறார். அவருக்கு ஜீப் கூடக் கிடையாது. ஆகையால் இந்தச் சான்றிதழ் கிடைப்பதற்கு ஒரு வருடம், ஒன்றரை வருடம் ஆகிறது. மற்ற மாவட்டங்களில் எல்லாம் இன்ஜினியர்கள் சான்றிதழ்கள் வழங்கினால் போதுமென்று இருக்கிறதாம். அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலும் உறுதிச் சான்றிதழுக்குப் பதிலாக இன்ஜினியர்களின் சான்றிதழ்கள் கொடுத்தால் போதும் என்ற உத்தரவையிட மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படும்போது பள்ளிக் கட்டிட உறுதிச் சான்று (Structural stability certificate) மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது. இதுபற்றிய புகார்கள் வந்ததன் அடிப்படையில், அரசு கட்டாயமாக இது வேண்டும் என்று அறிவித்து இருக்கிறது. சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும்போது, பொதுப் பணித் துறையிடம் இப்படிப்பட்ட சான்றிதழ் வேண்டும் என்று அரசு ஆணை 1977-லேயே இடப்பட்டது. பின்பு 1980-ல் இதே விதியை மற்றப் பள்ளிகளுக்கும் நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. கட்டிட உறுதிச் சான்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அவர்கள் நியமிக்கும் ஒரு பொறியாளர் குழுவிடமிருந்து பெறலாமா என்று அரசு

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 22]

ஆராய்ந்து பார்த்து, அது தேவை இல்லை என்று இறுதியில் முடிவு எடுத்தது. ஏனென்றால், கட்டிடங்களின் உறுதிப்பாட்டை முடிவு செய்வதற்கு பொதுப் பணித் துறையில்தான் வல்லுநர்கள் இருக்கிறார்கள்; மற்றவர்கள் அதைச் செய்யக் கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது. இதை எதிர்த்து ஒரு வழக்கு இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் அது முடிவடையவில்லை. மற்ற மாவட்டங்களில் அனுமதித்து இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியான கருத்து அல்ல. அப்படி எந்தவிதமான ஆணையும் இடப்படவில்லை. நர்சரிப் பள்ளிகளைப் பொறுத்தவரை அப்படிப் பெறலாம் என்று ஒரு ஆணையிடப்பட்டு இருக்கிறது. மற்ற பள்ளிகளுக்கு இல்லை. இதன் அடிப்படையில் பொதுப் பணித் துறை சான்றை ஏற்பதோடு தனியார் பொறியியல் வல்லுநர் சான்றையும் ஏற்கலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது; விரைவில் அதற்கு ஒரு முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு மிகவும் சீரும் சிறப்புமான கட்டிடங்கள் கட்டினாலும்கூட, சான்றிதழுக்கு அப்ளிகேஷன் போட்டால் ஒரு வருடம், ஒன்றரை வருடங்கள்கூட ஆகிவிடுகின்றது. ஆகையால், அப்ளிகேஷன் போட்டால் உடனடியாக 3 மாதத்திலோ அல்லது 4 மாதத்திலாவது சான்றிதழ் கிடைக்க ஏதாவது வழி உண்டா? அல்லது மாற்று வழி ஏதாவது இந்த சான்றிதழுக்கு வழங்கப்படுமா? அதற்கு தனியார் பள்ளி அல்லாது இருந்தால், உண்மையிலேயே இந்த அப்ளிகேஷன் ஒழுங்காக போட முடியாது. ஆகையினால், சீக்கிரமாக ஒரு மாதத்தில் அல்லது 3 மாதத்திலாவது சான்றிதழ் கிடைக்க ஒரு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியான விவரங்கள் சில நேரங்களில் தரப்படாததால் காலதாமதம் ஏற்படுகிறது. காலதாமதம் ஏற்படுவதால், அரசு அங்கீகாரம் பெறுவதில் தடை ஏற்படுவதோடு, மாணவர்கள் தேர்வு எழுதுவதிலேகூட தாமதம் ஏற்படுகிறது என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். இது குறித்து பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களுக்கு எழுதிக் கேட்டபோது, அவர்கள் அனைத்து நிர்வாகப் பொறியாளர்களுக்கும் விரைந்து நடவடிக்கை எடுக்க ஆணையிட்டுள்ளதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, இது குறித்து இன்னும் அரசு பரிசீலித்து மிக விரைவில் நல்ல முடிவை அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பிட்ரிக்ஸ் டி' சோசா.

Dr. BEATRIX D ' SOUZA : Hon. Speaker Sir, I understand that besides the Stability Certificate, the private Higher Secondary Schools

have been asked to start an endowment of Rs. 25,000/-. If this is so, I think it is unnecessary burden and will it be removed?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது வேறு விஷயம். இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

356—

காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரிவோருக்கு ஊதியம் நிர்ணயம் செய்தல்.

**23711—திரு. ஆர். பி. பரமசிவம் :*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் குடிசைத் தொழிலாகப் பெருகிவரும் காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரிவோருக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்யக் கோரி தொழிலாளர் அல்லது நிர்வாகத் தரப்பினரிடம் இருந்து இதுநாள்வரை கோரிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை. இந்நிலையில் அத்தொழிலைக் குறைந்தபட்ச ஊதிய அட்டவணையில் சேர்ப்பது குறித்து எவ்விதமான பரிசீலனையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைவ இறைச்சி என்று கூறப்படுகின்ற இந்த காளான் வளர்ச்சி பொதுவாக கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் பண்ணைகளாக வளர்க்கின்ற அந்த நல்ல தொழிலை ஏற்படுத்தி செய்து கொண்டு இருக்கிறார்கள். எப்போதுமே, எந்தத் தொழிலையும் மிக அற்புதமாகச் செய்கின்ற பாங்கினை உடைய அந்தக் கொங்குநாட்டு சிங்கங்கள் இந்தப் புதிய தொழிலையும் மிக விரைவாக நல்ல ஊக்கத்தோடு செய்து கொண்டு வருகிறார்கள். இந்த காளான் வளர்ப்பு என்பது ஒரு